**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 313/2021 |
| Name | : Asheervadham |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.09.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் 31.12.2024 ம் தேதி கணியூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 15.04.2021 ம் தேதி 00.30 மணிக்கு மடத்துக்குளம் காவல் நிலைய தலைமை காவலர் ராமலிங்கம் 1680 என்பவர் நிலையத்தில் இருந்த போது மைவாடி ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் செயல் அலுவலர் முருகன் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண் 100/2021 பிரிவுகள் 283 இதச ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை எனது புலன் விசாரணைக்கு வைத்திருந்தார். நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 15.04.2021 ம் தேதி 01.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துச்சாமி மற்றும் ஜெகதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அவை முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ இடத்தில் சாட்சிகளிடம் பார்வை மகஜரில் கையொப்பம் பெற்றேன். சாட்சிகள் முருகன், சகாதேவன், சண்முகவேலுச்சாமி, முத்துச்சாமி, ஜெகதீஸ்வரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்தேன். 15.04.2021ம் தேதி 04.15 மணிக்கு சம்பவ இடத்தில் வாதி அடையாளம் காட்டிய எதிரி நவாப் என்பவரை கைது செய்து அவரது நண்பர் கருப்புச்சாமி தகவல் தெரிவிக்கப்பட்டது. 04.45 மணிக்கு சம்பவ இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TN 39 F 1616 டிப்பர் லாரியை முத்துச்சாமி மற்றும் ஜெகதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 05.15 மணிக்கு எதிரி உடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து தக்க பாதுகாப்பில் வைத்து பின்பு 2 நபர் பிணையில் விடுவித்தேன். 28.04.2021ம் தேதி 09.45 மணிக்கு 2ம் எதிரி சாகுர் அமீது நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்தும் அவரது நண்பர் சூர்யபிரகாஷ் என்பவருக்கு தகவல் தெரிவித்தும் பின்பு இரு நபர் பிணையில் விடுவித்தேன். 04.05.2021ம் தேதி வழக்கின் சொத்தான டிப்பர் லாரியை மடத்துக்குளம் நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் ஆஜர்படுத்தினேன். **படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி நீதிமன்றத்தில் இருந்து வழக்குச் சொத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். TN 39 F 1616 என்ற எண் கொண்டி சஸ்மிதா என்று பெயர் எழுதப்பட்டுள்ள **டிப்பர் லாரியின் புகைப்படங்கள் இரண்டு அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 04.05.2021ம் தேதி இதச பிரிவு 283 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) பொதுவாக இரவு நேரத்தில் கொடுங்குற்றங்கள் நடந்தால் தான் நான் விசாரணைக்கு நேராக செல்வேன் என்றால் சரியல்ல. புகார் நள்ளிரவு 12.30 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கை 01.30 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 01.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். சம்பவ இடம் புறம்போக்கு பாறைக்குழி என்றால் சரிதான். அது ஊருக்கு வெளியே உள்ள காட்டுப்பகுதி என்றால் ஊருக்கு வெளியே உள்ளது காட்டுப் பகுதி அல்ல பொதுவாக நடமாட்டம் இருக்கும். கிராமத்திற்கு செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். வரைபடத்தில் மின் விளக்குகள் இருந்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். பாறைக்குழியில் கழிவுகள் இருந்ததாக வரைபடத்தில் குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

விசாரணையின் போது கழிவுகள் இருந்ததாக எந்த சான்றும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(2) வழக்கின் 1ம் எதிரியை நான் விசாரித்தேன். 15.04.2021ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அவர் தரவில்லை. இரவு 01.30 மணிக்கு இருட்டு நேரத்தில் தான் வரைபடம் தயார் செய்தேன் என்றால் சரிதான் வண்டி வெளிச்சம் இருந்தது. என்ன வண்டி இருந்தது என்றால் நாங்கள் சென்ற அரசு ஜீப் மற்றும் கார் இருந்தது. கார் யாருடையது என்றால் அருகில் இருந்து பொதுமக்களுடையது. இரவு 01.30 பொது மக்கள் சுமார் 100 பேர் இருந்ததிருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள். எத்தனை பேரை விசாரித்தேன் என்றால் 4-5 பேரை விசாரித்தேன். எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் அதிகாலை 4.15 மணிக்கு விசாரித்தேன். அதுவும் இருட்டு நேரம். வழக்கின் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தது சாட்சிகள் விசாரித்து அனைத்தும் இருட்டு நேரம் என்றால் சரிதான். வெளிச்சம் இருந்தது. வண்டி வெளிச்சத்தில் தான் விசாரணை நடந்தது என்றால் சரிதான்.

(3) வரைபடத்தில் குறிப்பட்டுள்ள உதவி கண்காணிப்பாளரை விசாரித்தேனா என்றால் அவர் வெளியூரில் இருந்தார். அவருடைய தோட்டம் அங்கு இருந்தது. வரைபடத்தில் குறிப்பட்டுள்ள வீட்டைச் சேர்ந்த வேலுச்சாமி என்பவரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். துரைசாமி என்பவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் ஆட்டுச் சாளை தான் இருந்தது அவர் அங்கு இல்லை. வழக்கு சம்மந்தமாக 14.04.2021ம் தேதி மாலை 6 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டதாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். புகார் மனுவில் அ.சா.1 முருகன் சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்தார். வழக்குச் சொத்தை சம்பவத்திற்கு மறு நாள் தான் கைப்பற்றினேன் என்றால் சரிதான். புகார் கொடுக்க வந்தவர்கள் எதிரி நவாப்பை அழைத்து வந்தார்களா என்றால் இல்லை.

(4) உண்மையிலேயே மருத்துவ கழிவு இருந்திருந்தால் அதை நான் வரைபடத்தில் குறித்திருப்பேன் அங்கு மருத்துவ கழிவு இல்லை என்றால் சரியல்ல. அங்கு கூடியிருந்த பொது மக்களிடம் மொபைல் போன் இருந்ததா என்றால் இருந்திருக்கலாம். வாகன வெளிச்சத்தில் விசாரணை செய்ததாக வழக்கு ஆவணத்தில் சொல்லவில்லை என்றால்

சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கமான சாட்சிகளை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. முருகன் என்பவர் மைவாடி பஞ்சாயத்து தலைவர் மட்டும் தான் என்றும் செயல் அலுவலர் இல்லை என்றால் சரிதான். புகாரில் செயல் அலுவலர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் செயல் அலுவலர் என்று லெட்டர் பேடில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(5) எனது விசாரணையில் உடுமலைப்பேட்டை நகராட்சியில் குப்பைகளைக் கொண்டு உரம் தயாரிப்பதாக தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1ம் எதிரி எனது விசாரணையில் உடுமலைப்பேட்டை நகராட்சியில் குப்பைகளைக் கொண்டு உரம் தயாரிப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் இது சம்மந்தமாக உடுமலைப்பேட்டை நகராட்சியில் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. வழக்கில் கொட்டப்பட்டதாக சொன்ன எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எந்த பொருளும் கொட்டப்படாததால் தான் நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. உடுமலைப்பேட்டை நகராட்சியில் குப்பைகளைக் கொண்டு உரம் தயாரித்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறார்கள் என்றால் அதைப் பற்றி தெரியாது. 14.04.2021ம் தேதி வேறு விவசாயிகளுக்கு உரம் தந்துவிட்டு திரும்பி வரும் போது எதிரியிடம் அ.சா.1யைத் தவிர மற்ற சாட்சிகள் தங்களுக்கு உரம் தரச் சொல்லி தகராறு செய்து எதிரி மறுத்ததால் வாக்குவாதம் ஏற்பட்டுபொய்யான புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகாரின் படி சம்பவம் 14.04.2021ம் தேதி மாலை 04.00 மணிக்கு நடந்ததாக உள்ளது என்றால் சரிதான். மறு நாள் 12.30 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை விசாரித்தேனா என்றால் வாக்குவாதம் செய்து காலதாமதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் செய்து காலதாமதம் ஏற்பட்டதாக சாட்சிகள் விசாரணையில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை நான் பொதுவில் விசாரித்து தெரிந்து கொண்டேன். உடுமலைப்பேட்டை நகராட்சியில் ஒப்பந்ததாரரிடம் 2ம் எதிரி உரம் வாங்கி விவசாயிகளிடம் கொடுத்து வருவதால் உடுமலை நகராட்சிக்கு தெரிந்தால் ஏதாவது பிரச்சனை ஆகிவிடும் என்று சாட்சிகள் ஒன்று கூடி பேசி அ.சா.1 மூலம் பொய் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் முறையாக வழக்கை

விசாரிக்கவில்லை என்றும், வழக்கில் சென்னபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை நீதிமன்றத்தில் காலதாமதமாக ஒப்படைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.09.18 17:00:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்